**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8069072

1. District மாவட்டம்: CHENNAI (சென்னை) PS காவல்நிலையம்: CHENNAI CITY-III Year ஆண்டு: 2023 FIR No. மு.த.அ. எண்: 03/2023/AC/CC-I Date நாள்: 05.07.2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a) and 7(b)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 05.07.2023 Date to நாள் வரை: 05.07.2023
Time Period : நேர அளவு Time from நேரம் முதல்: 1445 Hrs Time to நேரம் வரை: 20.00 Hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 05.07.2023 Time நேரம்: 2130 Hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம்: 2345 Hrs on 05.07.2023

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: 12 Kms. East
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி: Office of the Asst. Executive Engineer, Anti Sea Erosion Sub-division, Water Resources Department, Chepauk, Chennai
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: D. Chithra
(b) Father's/ ~~Husband~~'s Name : தந்தை / கணவர் பெயர்: Duraisamy
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம்: Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில்: Deputy Inspection Cell officer
(g) Address : முகவரி: Deputy Inspection cell officer, District Inspection cell office, chennai Collectorate, chennai-1

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Thiru Baskaran, Assistant Executive Engineer Water Resources Department, Anti Sea Erosion Sub-division, Chepauk, Chennai-600 005.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— No delay —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவிடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவிடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

As per enclosed Separate Sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் குறிப்பிட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு - எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் அ. குற்றமுறையிட்டவருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

05.7.2023 | Vallinayagam 05.07.2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டவர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் ரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் (G. VALLINAYAGAM)
Rank: நிலை Inspector of Police ........ No/எண் ..........
CC-II, VCAC, Chennai

<u>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.03/2023 சட்டப்பிரிவு 7(a) மற்றும் 7(b) ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு</u>

சென்னை-5, சேப்பாக்கம், நீர் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டம், உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை தொடர்பாக சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.து.சித்ரா, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சிங்காரவேலர் மாளிகை, சென்னை-1 அவர்கள் 05.07.2023ந்தேதியிட்ட அளித்த புகார் மனு தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு புகார் மனுவின் நகல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை உயர் அதிகாரியிடம் ஒப்புதல் பெறப்பட்டது. அதனை தொடர்ந்து, இன்று 05.07.2023ந்தேதி இரவு 22.30 மணிக்கு இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. திருமதி.து.சித்ரா அவர்கள் அளித்த புகாரின் விவரம் பின்வருமாறு

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி.து.சித்ரா,<br>மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலர்,<br>மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>சிங்காரவேலர் மாளிகை, சென்னை-1 | துணை காவல் கண்காணிப்பாளர்,<br>சென்னை நகரப்பிரிவு-3,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர், சென்னை-16. |

கடித எண்.184/2023/ஆய்வு நாள் 05.07.2023

அய்யா,

பொருள் - இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-5, சேப்பாக்கம், நீர் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டம், உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை நாள் 05.07.2023 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக.

----

சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழுமம் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3, துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் அவரது குழுவினர் இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை இன்று 05.07.2023ந்தேதி சென்னை-5, சேப்பாக்கத்தில் இயங்கி வரும் நீர் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டம், உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் கூட்டு தணிக்கையின் போது நீர் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டம், உதவி செயற்பொறியாளர் திரு.பாஸ்கரன் அவர்களின் அலுவலக அறையிலிருந்து பணம் ரூ.2,14,540/- கைப்பற்றப்பட்டது. இந்த கூட்டுத் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மற்றும் பணம் ரூ.2,14,540/- இத்துடன் பெறப்பட்ட வாக்குமூலங்கள் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது.

மேற்படி கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள

இணைப்பு- மேற்கண்டவாறு

ஒப்பம் xxx
மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்,
சென்னை மாவட்டம்.

Madam, Received this complaint on 05.07.2023 and after getting concurrence from the higher officials, this day (05.07.2023) at 2230 hrs, I am registering a case in V&AC Chennai City-III Crime No.03/AC/2023/CC-III U/S 7(a) and 7(b) of Prevention of Corruption Act 1988 as amended in 2018 and taken up for investigation Sd/-(S.VALLINAYAGAM), Inspector of Police, Chennai City-III Unit, Vigilance & Anti-Corruption, 05.07.2023.

<u>இருதுறை கூட்டுத்தணிக்கை நடவடிக்கை குறிப்பு பின்வருமாறு :</u>

சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலா் திருமதி.து.சித்ரா, மாவட்ட ஆட்சியா் அலுவலகம், சிங்காரவேலா் மாளிகை, சென்னை-1 மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3, துணை காவல் கண்காணிப்பாளா் மற்றும் அவரது குழுவினா், ஆகியோருடன் இணைந்து இன்று 05.07.2023-ந்தேதி மதியம் 2.45 மணியளவில் சென்னை-5, சேப்பாக்கம், நீா் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டம், உதவி செயற்பொறியாளா் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கையின் விவரம் பின்வருமாறு

---

| | | |
|---|---|---|
| இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலா்கள் | | திருமதி.து.சித்ரா,<br>சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலா், மாவட்ட ஆட்சியா் அலுவலகம், சிங்காரவேலா் மாளிகை, சென்னை-1. |
| | | திருமதி.வீ.தமிழ்மணி,<br>துணை காவல் கண்காணிப்பாளா்,<br>சென்னை நகரப்பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூா், சென்னை-16. |
| | | திரு.சு.வள்ளிநாயகம், காவல் ஆய்வாளா், சென்னை நகரப்பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூா், சென்னை-16. |
| | | திரு.மூா்த்தி, காவல் உதவி ஆய்வாளா், சென்னை நகரப்பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூா், சென்னை-16. |

சென்னை-5, சேப்பாக்கம், நீா் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டம், உதவி செயற்பொறியாளா் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலா்கள், நீா் வளத்துறை

தொடர்பான பணிகளை செய்யும் ஒப்பந்ததாரர்களிடம் லஞ்சம் வாங்குவதாக கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில் சென்னை சிங்காரவேலர் மாளிகையில் இயங்கி வரும் சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தின் ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.ஏ.கௌசல்யா அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, அவரது பரிந்துரையின் பேரில் சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.து.சித்ரா மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3, துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையிலான குழுவினருடன் இணைந்து மேற்சொன்ன சென்னை-5, சேப்பாக்கம், நீர் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டம், உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் இன்று 05.07.2023-ந்தேதி மதியம் 2.45 மணியளவில் இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2) சென்னை-5, சேப்பாக்கம், நீர் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டம், உதவி செயற்பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை வளாகத்தில், இந்திய அஞ்சல் துறை அலுவலகம் அருகில் மூன்று தளங்களை கொண்ட பழைய கட்டிடத்தில், தரை தளத்தில் மேற்சொன்ன அலுவலகம் இயங்கி வருகிறது. மேலும் மேற்சொன்ன நீர் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டம், உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தின் பிரதான வாசல் மேற்கு நோக்கி உள்ளது. மேற்படி அலுவலகத்தின் மேற்கு பக்கம் உள்ள பிரதான நுழைவுவாயிலில் உள்ள மரத்தினால் ஆன கதவில் உதவி செயற்பொறியாளர், நீ.வ.து, கடலரிப்பு தடுப்பு உபகோட்டம் என்ற பெயர் பலகை காணப்படுகிறது. மேலும் அலுவலகத்தின் உள்ளே நுழைந்ததும், தெற்கு பக்கத்தில் வடக்கு நோக்கி மரத்தினால் ஆன கதவுடன் கூடிய ஒரு சிறிய அறை காணப்படுகிறது. அந்த அறையின் நுழைவாயிலில் உள்ள கதவில்

பொறிஞர் சீ.பாஸ்கரன், M.E., M.Tech என்ற பெயர் பொறித்தவாறு பலகை காணப்படுகிறது. பின்னர் அந்த அறையில் உள்ளே நுழைந்ததும், வடக்கு நோக்கி இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது, அவர் தனது பெயர் பாஸ்கரன் என்றும், இந்த அலுவலகத்தில் உதவி செயற் பொறியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். பின்னர் சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.து.சித்ரா ஆகிய நானும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3 துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் அவரது குழுவினரையும் திரு.பாஸ்கரன், நீர் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டம், உதவி செயற்பொறியாளர் அவர்களிடம் அறிமுகம் செய்து கொண்டோம். அப்போது திரு.பாஸ்கரன், உதவி செயற்பொறியாளர் சற்று பதற்றமடைந்து காணப்பட்டார்.

3) பின்னர் திரு.பாஸ்கரன், உதவி செயற்பொறியாளர், நீர் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டம் அவர்களை விசாரித்தபோது, அவர் இந்த அலுவலகத்தில் கடந்த 13.05.2022ந்தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் இந்த அலுவலகத்தில் (1) திரு.தயாநிதி, இளநிலை பொறியாளராக பிரிவு-3, நீர் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டத்திலும், (2) திரு.மணிமாறன், உதவி பொறியாளராக பிரிவு-1, நீர் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டத்திலும், (3) திரு.பத்மநாபன், இளநிலை பொறியாளராக பிரிவு-2, நீர் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டத்திலும் (பணி மகாபுலிபுரம்) பணிபுரிந்து வருவதாக தெரிவத்தார். மேலும் இளநிலை உதவியாளராக திரு.ஜீவரத்தினம் என்பவர் பணிபுரிந்து வந்தவர், கடந்த 30.06.2023ந்தேதி பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டதாக தெரிவித்தார். மேலும் தனி ஆய்வாளராக (Work Inspectors) திரு.மோகன், திரு.ராஜேந்திரன், திரு.ராஜன் மற்றும் பாசன உதவியாளர் (Irrigational Assistant) திரு.கிஷோர் ஆகியோர் தற்போது

எண்ணூரில் கடல் அரிப்பு தடுப்பு சுவர் கட்டுமானப்பணியில் உள்ளதாகவும், மற்றொரு பாசன உதவியாளர் (Irrigational Assistant) திரு.பாலசுந்தரம் தற்போது அலுவலகத்தில் பணியில் உள்ளதாக தெரிவித்தார். இதைத்தவிர consolidated pay முறையில் திருமதி.இந்துமதி, திரு.அய்யனார், திரு.குமார், திரு.சந்தோஷ்குமார் மற்றும் திரு.அன்புராஜ் ஆகியோர் இந்த அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார்.

4) பின்னர் திரு.பாஸ்கரன், உதவி செயற் பொறியாளர் அவர்களிடம் உள்ள பணம் குறித்து கேட்ட போது, அவர் தனது கறுப்பு நிற Samsonite என்ற பெயர் பொறித்த பேக்கில் ஒரு பகுதியிலிருந்து ரப்பர் பேண்டால் சுற்றப்பட்டு காணப்பட்ட பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது பணம் ரூ.50,000/- (Rs.500X100 Nos. = Rs.50,000/-) காணப்பட்டது. அந்த பணம் குறித்து திரு.பாஸ்கரன் அவர்களிடம் விளக்கம் கேட்ட போது, காண்டிராக்டர்கள் திரு.வெங்கடேஷ் மற்றும் திரு.தேவ் ஆகியோர் அலுவலக செலவினத்திற்காக கொடுத்ததாக தெரிவித்தார். மேற்படி பணம் ரூ.50,000/- உதவி செயற் பொறியாளர் திரு.பாஸ்கரன் அவர்களுக்கு வழங்கப்பட்ட லஞ்ச பணமாக இருக்கும் என்பதால் மேற்சொன்ன பணம் ரூ.50,000/- கைப்பற்றப்பட்டது.

5) மேலும் அதே கறுப்பு நிற Samsonite பேக்கில் மற்றொரு பகுதியில் கறுப்பு நிற பர்ஸ் ஒன்றும் மற்றும் சிறிய கறுப்பு நிற பர்ஸ் ஒன்றும் காணப்பட்டது. அந்த இரண்டு பர்ஸ்கள் குறித்தும் அதிலுள்ள பணம் குறித்து உதவி செயற்பொறியாளர் திரு.பாஸ்கரன் அவர்களிடம் கேட்ட போது, அவர் தனது பர்ஸிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை எண்ணி பார்த்த போது பணம் ரூ.7,680/- இருந்தது. (Rs.500X2=Rs.1000/-; Rs.200X29=Rs.5800/-; Rs.100X6=Rs.600/-; Rs.50X3=Rs.150/-;

Rs.20X4=Rs.80/-; Rs.10X5=Rs.50/-). மேலும் சிறிய கறுப்பு நிற பா்ஸிலிருந்த பணத்தையும் எடுத்து ஆஜா் செய்தாா். அந்த ரூபாய் நோட்டுக்களை எண்ணி பாா்த்த போது பணம் ரூ.3,360/- காணப்பட்டது. (Rs.500X6=Rs.3000/-; Rs.200X1=Rs.200/-; Rs.50X2=Rs.100/- ; Rs.20X2=Rs.40/-; Rs.10X2=Rs.20/-). அந்த பணம் குறித்து திரு.பாஸ்கரன் அவா்களிடம் விளக்கம் கேட்ட போது, தனது Axis Bank ATMயிலிருந்து கடந்த 01.07.2023ந்தேதி பணம் withdrawal செய்ததாக தெரிவித்தாா். இது தொடா்பாக அன்றைய தேதியில் withdrawal தொடா்பாக mini statement சரி பாாத்தபோது அன்றைய தேதியில் அவரது Axis Bank வங்கி கணக்கிலிருந்து பணம் எதுவும் withdrawal செய்யப்படவில்லை. அவரது விளக்கம் ஏற்று கொள்ளும்படி இல்லாததால், அந்த இரண்டு கறுப்பு நிற பா்ஸிலிருந்த மொத்த பணம் ரூ.11,040/-யும் லஞ்சமாக பெற்றிருக்கலாம் என்பதால் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

6) மேலும் திரு.பாஸ்கரன் அவா்களின் அலுவலக மேஜையின் வலது பக்க டிராயா் மற்றும் இடது பக்க டிராயா் ஆகிய இடங்களிலும் சோதனை செய்தபோது, இடது பக்க டிராயாில் ரப்பா் பேண்டால் சுற்றப்பட்டு பணம் காணப்பட்டது. அந்த பணத்தை உதவி செயற் பொறியாளா் திரு.பாஸ்கரன் எடுத்து ஆஜா் செய்தாா். அந்த ரூபாய் நோட்டுக்களை எண்ணி பாா்த்த போது பணம் ரூ.50,000/- (Rs.500X100 Nos. = Rs.50,000/-) காணப்பட்டது. மேலும் அதே இடது பக்க டிராயாில் பணம் மடித்த நிலையில் காணப்பட்டது. அந்த பணத்தையும் உதவி செயற் பொறியாளா் திரு.பாஸ்கரன் எடுத்து ஆஜா் செய்தாா். அந்த ரூபாய் நோட்டுக்களை எண்ணி பாா்த்த போது பணம் ரூ.3,500/- (Rs.500X 7 Nos. = Rs.3,500/-) காணப்பட்டது. இவ்வாறு இடது பக்க டிராயாில் இருந்த மொத்த பணம் ரூ.53,500/- குறித்து உதவி செயற் பொறியாளா் திரு.பாஸ்கரன் அவா்களிடம் கேட்டபோது, தனது அலுவலக மேஜையின் இடதுபக்க டிராயாில் பணம் இருப்பது பற்றி தனக்கு தெரியாது என தெரிவித்தாா்.

அவரது விளக்கம் ஏற்று கொள்ளும்படி இல்லாததால், மேற்சொன்ன பணம் ரூ.53,500/- லஞ்சமாக பெற்றதாக இருக்கும் என்பதால் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

7) மேலும் இதனை தொடர்ந்து, அவரது அலுவலக அறையில் மேற்கு பக்க சுவற்றை ஒட்டி காணப்பட்ட பச்சை நிறத்தில் காணப்பட்ட இரும்பு பீரோ காணப்பட்டது. திடீர் தணிக்கை குழுவினர் அறிவுரைப்படி உதவி செயற்பொறியாளர் திரு.பாஸ்கரன் அவர்கள் தன் வசம் இருந்த பீரோவின் சாவியை கொண்டு, அந்த பீரோவை திறந்து காண்பித்தார். அதனை தொடர்ந்து பீரோவை சோதனை செய்தபோது, பீரோவின் முதல் அடுக்கு தட்டில் இரண்டு பண்டல்களாக ரப்பர் பேண்டால் சுற்றப்பட்டு பணம் காணப்பட்டது. அந்த பணத்தை உதவி செயற் பொறியாளர் திரு.பாஸ்கரன் எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது முதல் பண்டலில் பணம் ரூ.50,000/-யும் (Rs.500X100 Nos.= Rs.50,000/-) மற்றொரு பண்டலில் பணம் ரூ.50,000/-யும் (Rs.500X100 Nos.= Rs.50,000/-) காணப்பட்டது. இவ்வாறு இரும்பு பீரோவில் இருந்த மொத்த பணம் ரூ.1,00,000/- குறித்து உதவி செயற் பொறியாளர் திரு.பாஸ்கரன் அவர்களிடம் கேட்டபோது, தனது அலுவலக அறையில் உள்ள இரும்பு பீரோவில் பணம் இருப்பது பற்றி தனக்கு தெரியாது என தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்று கொள்ளும்படி இல்லாததால், அந்த பணம் ரூ.1,00,000/- லஞ்சமாக பெற்றதாக இருக்கும் என்பதால் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

8) மேலும் அந்த அலுவலகத்தின் உள்ளே நுழைந்ததும் வடக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது, அவர் தனது பெயர் தயாநிதி என்றும் இந்த அலுவலகத்தில் கடந்த ஜுன்-2014 முதல் இளநிலை பொறியாளராக பிரிவு-3, நீர் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டத்தில் பணிபுரிந்து வருவதாக

தெரிவித்தார். இந்த அலுவலகத்தில் கடல் அரிப்பு தடுப்பு பணிகளுக்கு தேவையான மதிப்பீடு தயார் செய்வது மற்றும் அரசிடமிருந்து அனுமதி பெற்றதும், அந்த பணிகளை செயல்படுத்துவது என தெரிவித்தார். மேலும் திரு.தயாநிதி அவர்களிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, அவர் தனது பர்ஸிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை எண்ணி பார்த்த போது பணம் ரூ.5,110/- காணப்பட்டது. (Rs.500X9=Rs.4500/-; Rs.100X2=Rs.200/-; Rs.50X3=Rs.150/- ; Rs.20X9=Rs.180/-; Rs.10X8=Rs.80/-). அந்த பணம் குறித்து திரு.தயாநிதி அவர்களிடம் விளக்கம் கேட்ட போது, தனது அலுவலக வளாகத்தில் உள்ள SBI Bank ATMயிலிருந்து கடந்த 01.07.2023ந்தேதி பணம் ரூ.9000/- withdrawal செய்ததாகவும் தனது செலவினம் போக மீதி பணம் ரூ.5,110/- வைத்திருப்பதாக தெரிவித்தார். இது தொடர்பாக அன்றைய தேதியில் withdrawal தொடர்பாக அவரது செல்போன் எண்ணிற்கு (செல்போன் எண்.9444800857) வந்த குறுஞ்செய்தியை சரி பார்த்தபோது பணம் ரூ.9000/- withdrawal செய்யப்பட்டது உறுதி செய்யப்பட்டு, அவரது விளக்கம் ஏற்று கொள்ளும்படி இருந்ததால் பணம் ரூ.5,110/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

9) மேலும் அந்த அலுவலகத்தின் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது, அவர் தனது பெயர் மணிமாறன் என்றும் இந்த அலுவலகத்தில் கடந்த 08.09.2021 முதல் உதவி பொறியாளராக பிரிவு-1, எண்ணூர், நீர் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டத்தில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். இந்த அலுவலகத்தில் கடல் அரிப்பு தடுப்பு பணிகளுக்கு தேவையான மதிப்பீடு தயார் செய்வது மற்றும் அரசிடமிருந்து அனுமதி பெற்றதும், அந்த பணிகளை செயல்படுத்துவதாக தெரிவித்தார். மேலும் திரு.மணிமாறன் அவர்களிடம் உள்ள பணம்

குறித்து கேட்டபோது, அவர் தனது பர்ஸிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை எண்ணி பார்த்த போது பணம் ரூ.350/- இருந்தது. அந்த பணம் அவரது சொந்த பணம் என்று அவர் கூறிய விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு அவரிடமே அந்த பணம் திருப்பி அளிக்கப்பட்டது.

10) மேலும் அந்த அலுவலகத்தில் திரு.மணிமாறன் அருகில் நின்றிருந்த நபரை விசாரித்தபோது, அவர் தனது பெயர் செல்வராஜ் என்றும், இந்த அலுவலகத்தில் கடந்த 02.06.2023ந்தேதி முதல் உதவி பொறியாளர் திரு.மணிமாறன் அவர்களுக்கு அலுவலக பணியில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். இது குறித்து திரு.மணிமாறன் அவர்களிடம் கேட்டபோது, அவர் அலுவலக பணியில் பணிச்சுமை அதிகம் இருந்ததால், தனக்கு உதவியாளராக திரு.செல்வராஜ் என்பவரை உதவி செயற்பொறியாளர் திரு.பாஸ்கரன் அவர்களின் அனுமதியுடன் பணியில் அமர்த்தி கொண்டதாக தெரிவித்தார். மேலும் அவர் தூர் வாரும் பணிகளை மேற்கொள்ளும் காண்டிராக்டர் எண்ணூரைச் சேர்ந்த திரு.ஜமாலுதீன் என்பவரிடமிருந்து மாத ஊதியமாக பணம் ரூ.10,000/- பெற்று கொள்ளும்படி, தான் கூறியதை அடுத்து அவரிடமிருந்து திரு. செல்வராஜ் பெற்று கொண்டு அந்த பணத்தை தற்போது அவர் வைத்திருப்பதாக கூறினார். இது தொடர்பாக திரு.செல்வராஜ் அவர்களிடம் கேட்டபோது அவரும் திரு.மணிமாறன் கூறியதையே தெரிவித்து, பணம் ரூ.10,000/- எடுத்து ஆஜர் செய்தார். இது தொடர்பாக திரு.ஜமாலுதீன் அவர்களை அவரது செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு பணம் ரூ.10,000/- கொடுத்தது உறுதி செய்யப்பட்டதால், அந்த பணம் திரு.செல்வராஜ் அவர்களிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

11) மேலும் அந்த அலுவலகத்தில் திரு.மணிமாறன் அருகில் நின்றிருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது, அவர் தனது பெயர் கோவிந்தராஜ் என்றும், சென்னை தரமணியில் உள்ள மண் பரிசோதனை ஆராய்ச்சி கோட்டத்தில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். இந்த அலுவலகத்தில் உதவி செயற்பொறியாளர் திரு.பாஸ்கரன் அவர்களை அலுவலக பணி தொடர்பாக சந்திக்க வந்ததாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, அவர் தனது பர்ஸிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை எண்ணி பார்த்த போது பணம் ரூ.20,350/- காணப்பட்டது. (Rs.500X40=Rs.20,000/-; Rs.200X1=Rs.200/-; Rs.50X2=Rs.100/- ; Rs.20X2=Rs.40/-; Rs.10X1=Rs.10/-). அந்த பணம் குறித்து திரு.கோவிந்தராஜ் அவர்களிடம் விளக்கம் கேட்ட போது, சென்னை சூளைமேடு SBI Bank ATMயிலிருந்து இன்று 05.07.2023ந்தேதி காலை பணம் ரூ.20,000/- withdrawal செய்ததாகவும், வீட்டு செலவினத்திற்காக பணம் எடுத்ததாக தெரிவித்தார். மேலும் அதைத்தவிர பணம் ரூ.350/- செலவீனத்திற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். இது தொடர்பாக இன்றைய தேதியில் அவரது வங்கி கணக்கு புத்தகத்தை சரி பார்த்தபோது பணம் ரூ.20,000/- withdrawal செய்யப்பட்டது உறுதி செய்யப்பட்டு, அவரது விளக்கம் ஏற்று கொள்ளும்படி இருந்ததால் பணம் ரூ.20,350/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை சோதனையின் முடிவில் நீர் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டம், உதவி செயற்பொறியாளர் திரு.பாஸ்கரன் அவர்கள் தனது அலுவலக பதவி அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, காண்டிராக்டர்களிடம் லஞ்சமாக பணம் பெற்றிருப்பதற்கு முகாந்திரம் இருப்பது தெரிய வருவதால், மொத்த பணம் ரூ.2,14,540/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை கூட்டு தணிக்கையின்போது இந்த அலுவலகத்தில் உள்ள எந்த ஒரு ஆவணங்களுக்கும் எந்த

வித சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் சென்னை-5, சேப்பாக்கம், நீர் வளத்துறை, கடல் அரிப்பு தடுப்பு உபகோட்டம், உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தின் அன்றாடப் பணிகளுக்கோ பொது மக்களுக்கோ இடையூறு ஏற்படுத்தப்படவில்லை. இந்த திடீர் சோதனை 05.07.2023-ந்தேதி மதியம் 2.45 மணிக்கு தொடங்கி இரவு 20.00 மணியளவில் முடிக்கப்பட்டது.

ஒப்பம்/- (து.சித்ரா)
மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலர்,
சென்னை மாவட்டம்

ஒப்பம்/-XX
V.THAMIZHMANI
DSP, CC III
V & AC, CHENNAI

ஒப்பம்/ XX
S.VALLINAYAGAM
Inspector of Police,
CC III, V & AC, CHENNAI

ஒப்பம்/ XX
R..MOORTHY
SI of Police,
V & AC, CC III, Ch-16

ஒப்பம்/ XX
S.BASKARAN
Asst.Exe.Engineer
Anti Sea Erosion Sub Dn
Chepauk, Ch-5.

ஒப்பம்/ XX
M.MANIMARAN
Assistant Engineer, WRD
Anti Sea Erosion Section-1
Ennore, Chennai-57.

ஒப்பம்/- xx)
(சு,தயாநிதி)
இளநிலை பொறியாளர்,
கடலரிப்பு தடுப்பு பிரிவு-III
சேப்பாக்கம்,

ஒப்பம்/- xx)
(அ.ந.கோவிந்தராஜ்))
உதவி செயற் பொறியாளர்,
பரிசோதனை உபகோட்டம்
எண்-II தரமணி

ஒப்பம்/ XX
M.Selvaraj

Therefore I register a case in V&AC CC-III Crime No.03/2023/AC/CC-III under Section 7(a) and 7(b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 against the Accused on 05.07.2023 at 22.30 hrs.

The original FIR is forwarded to the Court of Hon'ble Special Judge for the cases under Prevention of Corruption Act, Chennai and copies to the officers concerned.

S.Vallinayagam 05.07.2023

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016